16 [1986 மே 13

அதிபர்கள் அங்கே போய் அதிலே பணத்தை செலவு செய்து காரியங்கள ஆற்றியதற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய தொழில் கொள்கையை மாற்றிக்கொண்டு அந்த உத்தர வினைத் திரும்ப பெறுவதுபோல நடைபெறுவது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை களை தடுக்கின்ற முயற்சி இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட, கொள்கையை மாற்றிக்கொண்ட செய்திகள் எனக்குத் தெரியாது. ஏற்கெனவே 3 இடங்கள் உங்களுடைய மாவட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அம்மையாருடைய தொகுதியிலே இல்லாதது அம்மையாருக்கு குறைதான். நாளா வட்டத்திலே நிறைவு செய்ய முயற்சிக்கலாம்.

வெல்லம்பட்டி பகுதியில் இரும்புத்தாது.

762—(*வினா எண். 6111) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் வேடசந்தூர் வட்டம் வெல்லம் பட்டி பகுதியில் ஏராளமான அளவில் இரும்புத்தாது கிடைப் பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு க. இராசாராம்: (அ) இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சலுகைகள் மற்றும் ஊதியம்.

763—(*வினா எண். 3539) திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் அனைத்து சலுகைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

1986 மே 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் சிலவற்றினை, அரசுநிதிஉதவிபெறும்தனியார் பள்ளிஆசிரியர்களுக்கும்நீட்டிக்கப் பட்டுள்ளது. ஆனால் மருத்துவச் செலவைத் திரும்பபெறும் சலுகை (Medical Reimbursement), விடுப்புக்காலப் பயணச் சலுகை (L.T.C.) போன்றவற்றை தனியார் பள்ளி ஆசிரியர் களுக்கு நீட்டித்து ஆணை வழங்குவதனால் அரசுக்கு ஏற் படும் கணிசமான கூடுதல் நிதிச் செலவை முன்னிட்டு, நீட்டிக்க முடியவில்லை.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்கள் திறமையான ஆசிரியர்களாக இருக்கிறார்கள். திறமைக்கு ஊக்கம் தரும் வகையில் அவர்களுக்கு என்ன என்ன சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு தரப்படுகின்ற சலுகைகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்படுகின்றன. சிலவற்றை நாம் தரவில்லை. இதிலே 2 சலுகைகளை எடுத்து கணக்கிட்டுப் பார்த்ததில் கணிசமான அளவுக்கு செலவு ஏற்படும் என்ற காரணத்தால் அவைகளை இப்போது நடைமுறைப்படுத்தவில்லை என்று நான் தெரிவித்து இருக்கிறேன். மற்ற சலுகைகள் பொதுவாக இருக்கும்.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தனியார் பள்ளிகளை அரசு ஏற்கும் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பதவி உயர்வு தருகின்ற போது ஆசிரியர்களுக்கு சீனியாரிட்டி அடிப்படையில் தராமல் அவர்களுக்கு விருப்பமானவர்களுக்கு தந்து கொண்டிருக்கின்ற நிலைமையைத் தடுக்கின்ற வகையில் தனியார் பள்ளிகள் அனைத் திலும் சீனியாரிட்டி அடிப்படையில் பதவி உயர்வு தர வேண்டும் என்று வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சீனியாரிட்டியையும் அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

[1986 மே 13

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ செலவு செய்யும் இந்த அரசு இந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வைத்திய வசதியை விஸ்தரிப்பதற்கு மீண்டும் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலித்துப் பார்த்தபோது அதற்கு அதிகச் செலவு ஆகும் என்ற காரணத்தால் இப்போது அதை நாம் நீட்டிக்கவில்லை.

திரு. அ. மலர்மன்னன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல தனியார் பள்ளிகளில் இன்றையதினம் ஆசிரியர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு தருகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? அப்படி பிடித்துக் கொண்டு கொடுக்கின்ற அந்த தனியார் பள்ளிகளுக்கு இருக்கின்ற உரிமையை ரத்து செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்னால் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. அதற்குப் பிறகு இப்போது நாம் எடுத்துக் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக அப்படி இல்லாத நிலைமையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அப்படி எங்காவது இருக்குமானால் அதைப்பற்றி ஆசிரியர்கள் புகார் செய்தால் நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். அப்படிப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு நாமே நேரடியாக சம்பளம் தரலாம்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள், தீங்குகள் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் கொடுக்காமல் குறைந்த தொகையை ஆசிரியர்களுக்கு கொடுப்பது, அத்தனை பேருக்கும், நமது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அவர் அதை எதிர்த்து பல நடவடிக்கைகளை கூட எடுத்து இருக்கிறார்கள். பிரச்சினை என்னவென்று சொன்னால் இன்றைக்கு அந்த நிலைமை தீவிரம் அடைந்து இருக்கிறது, குறைந்தபாடு இல்லை. ஆகவே ஒரு ''காம்பரஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன்'' இந்தத் தனியார் பள்ளிகள் இன்னமாதிரி வேலை முறைகளை, சம்பள முறைகளை கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக சீரான, விளக்கமான, விரிவான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1986 மே 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு அப்படி அதிகமான அளவுக்கு இருந்து இருக்கலாம். இப்போது அப்படி இல்லை. அப்படி இருந்திருந்தால் என்னுடைய கவனத்திற்கு தாராளமாக கொண்டு வந்து இருப்பார்கள். நாங்களும் அதற்கான நடவடிக்கை எடுக்க முன் வந்து இருக்கிறோம். சில நேரங்களில் தேவையானால் அப்படிப்பட்ட பள்ளிகளை அரசே எடுத்து நிர்வகிக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதை விட சம்பளத்தை நேரடியாக தருகின்ற முறையை நாம் பல பள்ளிகளில் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே சம்பளத்தை குறைத்துத் தருகிறார்கள் என்ற அந்த புகாருக்கு இப்போது அதிக ஆதாரம் இல்லை என்று கருதுகிறேன். குறிப்பிட்ட பள்ளிகளில் அப்படி இருக்குமானால் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் அதன்மீது தக்க நடவடிக்கையை நாம் எடுக்கலாம். முன்பு ஆசிரியர்கள் சங்கம் அவ்வளவு பலமாக இல்லாமல் இருந்த காலத்தில் இப்படி நடந்து இருக்கலாம். இப்போது ஆசிரியர்கள் சங்கம் பலம் அடைந்துள்ள இந்தக் காலத்தில் அப்படி ஒரு நிர்வாகம் இருக்குமானால் ஆசிரியர்கள் சங்கம் நிச்சயமாக அதை விட மாட்டார்கள். அரசாங்கம் அவர்களுக்கு துணையாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லாமல் செய்து விடலாம். அவ்வளவு தைரியமாக இவற்றை எல்லாம் எதிர்த்து தவறு செய்கின்ற அளவுக்கு எந்த நிர்வாகமும் இருக்கும் என்று நான் கருதவில்லை. அப்படி குறிப்பிட்ட பள்ளி இருக்குமானால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும்.

764—(* வினா எண். 3835—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மைனாரிட்டி பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக ஊதியம் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், 7 அல்லது 8 ஆண்டுகளாக பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க உடனடி நடவடிக்கை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மைனாரிட்டி பள்ளிகளில் அரசினரால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கட்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்ற புகார் எதுவும் பெறப்படவில்லை. முறையான பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்கட்கும் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.